**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.134/2020**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07–ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.03.2024 | கணவர் பெயர்: | அர்ஜுனன் |
| பெயர்: | திருபுரசுந்தரி<br>(PW-1 Chief ) | வயது : | 48/2024 |
| கிராமம்: | சட்டநாதபுரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 07.03.2024.</u>**

நான் இவ்வழக்கின் 1–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

10.07.2014-ம் தேதியிட்ட 2-ம் வாதி பெயரில் தாவா சொத்தில் உள்ள வீட்ற்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.** (எண்ணிக்கை -2)

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.